

**கொடைக்கானலில்
கிறிஸ்துவின் சபையார்**

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M
&
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Licensed to Post Under W.P.P. No. TN/WPP-169/SR/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Jun. 2017

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 ஜூன் 2017 கனி 7

**Know ye not that your bodies are the members of Christ? - 1Corinthians 6:15**



**உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? — 1கொரிந்தியர் 6:15**

**THE WORD OF CHRIST**

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்களில் இணைந்து கொள்ளுங்கள்

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ வாசகர் கூட்டங்களை வாசகர்களுடைய இல்லங்களில் நடத்திக்கொண்டு வருகிறோம்.
உங்கள் மாவட்டத்தில் இதுவரை ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ வாசகர் கூட்டம் நடைபெறவில்லை என்றால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.
உங்களுடைய மாவட்டத்திலும் கிறிஸ்துவின் வசனம் தொனிக்கட்டும்.
கர்த்தருடைய ஊழியத்தை எங்களோடு சேர்ந்து செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கொடுக்கப்படுகிறது அதை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
இதற்காக ஒரு பெரிய ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவேண்டாம்.
உங்களுடைய வீட்டில் ஒரு சிறு இடத்தை ஒதுக்கிக் கொடுத்தால் போதும் அந்த இடத்தில் இக்கூட்டங்களை நடத்தலாம்.
தொடர்புக்கு: 9443558041

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN
Associate Editor
K.R.K.Ravi Asir

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

“Go ye into all the world, and preach the gospel to every creature” - Mark 16:15
“The Churches Of Christ Salute you” Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 202

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. நீங்களோ கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்றும், அதின் ஆகாரமாகிய அதின் பலன் அற்பமானது என்றும் சொல்லுகிறதினாலே, என் நாமத்தை என்னவாக்குகிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
2. பவுல் யாரை என் சகோதரனும், உடன் வேலையாளும், உடன் சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும் என் குறைச்சலுக்கு உதவி செய்தவனும் என்று எழுதியிருக்கிறார்?
3. ஆசாரியருடைய நிலத்தை மாத்திரம் கொள்ளாதிருந்த எகிப்தின் அதிகாரிய யார்?
4. பவுல் யாரைக் கண்டு நீ கர்த்தரிடத்தில் பெற்ற உழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லச் சொன்னார்?
5. இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குச் காணிக்கையை எப்படிக் கொண்டுவந்தார்கள்?
6. நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்கு பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று எந்த சபையாருக்கு பவுல் எழுதியிருக்கிறார்?
7. கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் எவனும் அவன் குமாரரும் செய்தார்கள்?
8. நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக் குறித்து எவருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம் என்கிறார் பவுல்?
9. உன் சகோதரன் சேர்க்கப்பட்டதுபோல நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய் என்று யாரை நோக்கி கர்த்தர் சொன்னார்?
10. எதுவும் எதுவும் உண்டாயிருந்தால் அதுபோதுமென்றிருக்கக்கடவோம்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

20

நாள்: 22.06.2017 வியாழக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: C. ஹென்றி ஓஸ்டீன், இவ்விதழின் வாசகர்
10, A.K. காம்லக்ஸ், செங்கமேட்டு தெரு,
மைலாடுதுரை - 609 001
நாகபட்டிணம் மாவட்டம்
தொடர்புக்கு: 9364681993



சிறுவர் பகுதி

## பவுலை யூதருடைய கைக்கு தப்புவித்த சேனாபதி

*வேதபகுதி: அப்போஸ்தலர் 23:8-30*



பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாகி அதனால் கலகம் உண்டானபோது, பவுலை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி சேனாபதி கட்டளையிட்டான். விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டார் கள். இந்த விஷயத்தை பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே சென்று பவுலுக்கு இதை அறிவித்தான். பவுல் அவனை சேனாபதியினிடத்திற்கு அனுப்பி சொல்லும்படி செய்தான். இதைக் கேட்ட சேனாபதி நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி தேசாதிபதியாகிய பேலிக்ஸ்க்கு ஒரு கடிதத்தையும் எழுதி அனுப்பினான்.

அது என்னவென்றால் கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியுலீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்; இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறியவேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்.

தேவனை அறியாத ஒரு சேனாபதி பவுலை நியாயம்விசாரித்து மரணத்திற்கு தப்புவித்திருக்கும்போது தேவனை அறிந்த நாம் மரணத்திற்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டாமா?

**மனப்பாட வசனம்:** "மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி" (நீதி.24:11)




# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 17 ஜூன் –2017 கனி – 7


ஆசிரியருரை

## நூறுமடங்கு பலன்
### Hundredfold Blessing



**க**ர்த்தரை நம்புகிறவர்கள் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நாம் நம்முடைய கவனத்தை பரிசுத்த வேதாகமத்திற்கு திருப்புவோமானால் ஈசாக்கு என்று அழைக்கப்பட்ட ஆபிரகாமின் குமாரன் நூறுமடங்கு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான் என்பதை அறியலாம். அவன் எவ்விதமாக நூறுமடங்கு ஆசீர்வாதத்தை தேவனிடத்திலிருந்து பெற்றான் என்றால். முதலாவது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான். இன்றைக்கு நீங்களும் நானும் கீழ்ப்படிகிறோம். ஆனால் இந்த ஈசாக்கைப்போல நாம் கீழ்ப்படிகிறோமா? "கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு" என்றார் (ஆதி.26:2). ஒருவேளை இந்த இடத்தில் நாமாக இருந்திருந்தால் என்ன சொல்லுவோம். எகிப்து நல்ல தேசம் நான் அங்கேபோய் குடியிருக்கிறேன் ஆண்டவரே என்று தேவனுக்கே ஆலோசனை சொல்லியிருப்போம் அல்லவா! ஈசாக்கோ அப்படியில்லாமல் கர்த்தர் சொன்ன தேசத்தில் குடியிருந்தான். அவனுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் என்னவென்றால்; "இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் என்றார்" (ஆதி.26:3). கர்த்தர் அவனோடு இருந்தபடியால் இந்த நூறுமடங்கு ஆசீர்வாதத்தை அவன் பெறமுடிந்தது. கர்த்தர் இல்லாத வாழ்க்கை கால் வாழ்க்கைகூட இல்லையென்றே சொல்லவேண்டும்.

அநேக குடும்பங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அங்கே அவர்களோடு கர்த்தர் இல்லை. அவர் இருப்பாரானால் ஈசாக்கைப்போல நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். கர்த்தர் நம்மோடு இருக்க ஈசாக்கைப்போல அவருடைய வார்த்தைக்கு முதலாவது நாம் செவிகொடுக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கும் இடம் நல்ல இடமாகவே இருக்கும். லோத்தைப்போல இடத்தைப் பார்க்காமல் கொடுத்தவரை நோக்கிப்பார்த்து அவருடைய சித்தம்செய்யும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என நீதி.3:6-ம் வசனத்தில் படிக்கிறோம். நாம் எங்கே போனாலும் கர்த்தரையும் அவருடைய கிருபையுள்ள வசனங்களையும் நாம் நினைக்கவேண்டும். அப்பொழுது எல்லாவற்றிக்கும் வல்லவராகிய தேவன் நம்மோடிருப்பார். அதையே சாலொமோன் இங்கு நமக்கு நினைப்பூட்டுகிறார். சிலர் இருப்பிடத்தை விட்டு மற்றஇடங்களுக்கு சென்றவுடன் இருப்பிடத்தையும் மறந்துவிடுவார்கள். தங்களை அந்த இடத்திற்கு அழைத்து வந்த தேவனையும் மறந்துவிடுவார்கள். புதியவைகளை கண்ட சந்தோஷத்தில் அங்குள்ளவைகளால் ஈர்க்கப்படும்போது அவர்களுடைய இச்சையை அறிந்துகொண்ட பிசாசு அவர்களில் களைகளைவிதைத்து தந்திரமாக அவர்களை வசப்படுத்திவிடுவான். பின்பு யார் சொன்னாலும் கேட்காமல், தாங்கள் ஏதோ புதுமையானதைக் கண்டு கொண்டதைப்போல தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்திக்கொண்டு கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போவார்கள். ஈசாக்குக்கோ கர்த்தர் மேலும் சொல்லும்போது; "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.26:4,5). பெற்றோர் செய்த நன்மைகள் பிள்ளைகளுக்கு கிடைப்பதை இங்கே நாம் வாசிக்கிறோம். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். அதனால் கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணினார். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு நேயரே! நீ கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் செவிகொடுப்பாயானால் உன் சந்ததியையும் கர்த்தர் ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். நீ ஆபிராகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுவாய்.

"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்" (ஆதி.26:12). தேவன் சொன்னபடி அந்த தேசத்தில் குடியிருந்துகொண்டு அவன் விவசாயம் செய்ய ஆரம்பித்தான். துவங்கின அந்த வருஷத்திலே நூறுமடங்கு ஆசீர்வாதம் கிடைத்தது. துவங்கின வருஷத்திலே விதைத்த பலனை இழக்கிற அநேகரைக்குறித்து நாம் கேள்விப்படுகிறோம் அல்லது அவர்கள் அத்தோடு அந்ததொழிலை விட்டுவிட்டு வேறே வேலைக்கு திரும்புகிறதைக் குறித்து கேள்விப்படுகிறோம். ஆனால் ஈசாக்கு கர்த்தருடைய வார்த்தையை நம்பி செயல்பட்டபடியால் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான். "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" என காண்கிறோம் (நீதி.10:22). உங்களுடைய தொழில் உங்களுக்கு ஆசீர்வாதமாக இல்லையென்றால் அதை மறு ஆய்வு செய்யுங்கள். கர்த்தருக்கு ஏற்ற காரியத்தை செய்துகொண்டு இருக்கின்றீர்களா? அல்லது மற்றவர்கள் கொடுத்த ஆலோசனையின்படி உங்களுடைய தொழிலை செய்துகொண்டிருக்கிறீர்களா? என்பதை சற்று தேவசமுகத்தில் வைத்து சிந்தியுங்கள். கர்த்தர் உங்களை அவருடைய வல்லமையுள்ள வசனத்தின்படி நடத்துவார். அவருடைய ஆசீர்வாதமே நமக்கு ஐசுவரியத்தைத் தரும், அவருடைய ஆலோசனை நம்முடைய






# தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான இரண்டாவது சிறப்பு ஐக்கிய கூட்டம்

**இடம்: ஹோட்டல் அருண், 24, ஸ்டேட்பேங் ரோடு, (ரயில்வே ஸ்டேஷன் சமீபம்) திருச்சி -1**

**நாள்: புதன் கிழமை 21.06.2017**

**நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**






- கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் அனைவரையும் மீண்டும் அன்புடன் அழைக்கிறோம்.
- உங்கள் வருகையை உறுதிசெய்ய 94435 58041 என்ற எண்ணுக்கு SMS மூலம் உங்கள் முழு முகவரியை பதிவு செய்து கொள்ளுங்கள்.
- வருகைதரும் ஊழியர்களை கனப்படுத்த விரும்புகிறோம்
- உங்கள் ஊழியத்தின் கருத்துக்களை மனந்திறந்து பகிர்ந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.
- ஜுன் 10-ம் தேதிக்குள் பெயரைப் பதிவு செய்யும் அனைவருக்கும் அழைப்புக்கடிதம் அனுப்பப்படும். வாருங்கள் ஒருமனப்பட்டு ஜெபிப்போம்.
- இக்கூட்டங்களுக்கு உதவிசெய்ய விரும்பமுள்ளவர்களை வரவேற்கிறோம்.
- இக்கூட்டத்தின் நோக்கம் சகோதரர்களுடைய ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதும், ஒரே சத்தியத்தை எடுத்துரைப்பதுமாகும்.

*"நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி.... எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" – 1 யோவான் 1:3*

**"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:21)**

நன்மைசெய்யக் கடவோம்'' (கலா.6:10) என்ற வசனத்திற்கேற்ப தனக்குக் கிடைத்த சமயத்தையும் சூழ்நிலையையும் இவள் பயன்படுத்திக் கொண்டாள்.

**3. அறியப்பட்டவர்களால் நேசிக்கப்பட்டாள்.**

தபீத்தாள் செய்த உதவியினிமித்தம் அவளால் அறியப்பட்ட விதவைகள் தபீத்தாள் மரணமடைந்ததும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து பேதுருவை சூழ்ந்து நின்றார்கள் என வசனம் 39-ல் வாசிக்கிறோம். அவளுடைய பிரிவை அந்த விதவைகளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவே அவர்களெல்லாரும் பேதுருவிடம் எல்லாவற்றையும் காண்பித்து அழுதிருக்கிறார்கள். நமக்கு அன்பான அருமையான ஒருவரை நாம் மரணத்தின் மூலம் இழக்கும்போது நாமும்கூட அவர்கள் உயிரோடிருந்தபோது செய்த நற்காரியங்களைச் சொல்லி அழுகிறோமல்லவா? ஏன்? நாம் அவர்களிடம் கொண்ட அன்பு அவ்வாறு நம்மைச் செய்யத் தூண்டுகிறது. தபீத்தாள் மீது கொண்ட அன்பு, தபீத்தாள் அவர்களுக்குச் செய்த உதவியினால் வந்தது. எனவே அதையெல்லாம் காண்பித்து அழுதார்களென வாசிக்கிறோம். வல்லமையுள்ள தேவனோ பேதுருவைக்கொண்டு இந்த தபீத்தாளை உயிரடையச் செய்தார். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தபோது அநகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அன்பு சகோதரியே, தபீத்தாளிடமிருந்த அந்த சிறிய ஊசி எப்பேர்பட்ட காரியத்தைச் செய்துள்ளது! இவளுடைய ஜீவியம் நமக்கு ஒரு நல்மாதிரி அல்லவா! தேவனால் உண்டாக்கப்பட்ட அவருடைய ஜனங்களாகிய நாமனைவரும் ஒரு சில தாலந்துகளை நிச்சயமாகவே பெற்றிருக்கிறோம். நாம் செய்யவேண்டிய பணிகள் அதிகம். இந்தப்பணிகளைச் செய்யவேண்டியது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்திற்கேற்ப நாம் என்ன செய்யவேண்டுமென சிந்திப்போம். கர்த்தர் தாமே தம்முடைய சித்தத்தின்படி அவருடைய கிரியையிலே நாம் பெருகும்படி நமக்கு உதவிசெய்வாராக!

## பொது அறிவுச் சோதனை

1. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் அமைந்துள்ள துறைமுகம் எது?
   அ) விசாகப்பட்டிணம் ஆ) கோவா இ) கொல்கத்தா
2. இந்தியாவின் தலைநகர் கொல்கத்தாவில் இருந்து டெல்லிக்கு மாற்றப்பட்ட ஆண்டு எது?
   அ) கி.பி.1911 ஆ) கி.பி.1910 இ) கி.பி.1912
3. கேரளாவையும், தமிழ்நாட்டையும் இணைக்கும் முக்கிய கணவாய் எது?
   அ) பால்காட் ஆ) தால்காட் இ) போர்காட்
4. வைகை ஆறு தோன்றும் இடம் எது?
   அ) ஏலமலை ஆ) அகத்தியர் குன்றுகள் இ) கொல்லிமலை
5. காந்திஜீக்கு 'தேச தந்தை' என்று பட்டமளித்தவர் யார்?
   அ) சுபாஸ்சந்திரபோஸ் ஆ) ராஜாஜி இ) காமராஜர்

**விடைகள்:** 1. விசாகப்பட்டிணம் 2. கி.பி.1911 3. பால்காட் 4. ஏலமலை 5. சுபாஸ்சந்திரபோஸ்



வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரும். ஈசாக்கு அந்த தேசத்திலே விருத்தியடைந்தான் என காண்கிறோம். "அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்" (ஆதி.26:13). பொதுவாக வளர்ச்சி அநேகருக்கு பொறாமையைக் கொண்டுவரும். ஈசாக்குடைய வாழ்க்கையிலும் அது நடந்தது. "அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டு மந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன்பேரில் பொறாமைகொண்டு, அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்" (ஆதி.26:14,15). பொறாமையோ எலும்புருக்கி என வேதத்தில் படிக்கிறோம். ஈசாக்கைக் கண்ட ஜனங்கள் பொறாமைகொண்டனர். அவனுடைய நிலம் நன்றாய் விளைகிறது, அவனுடைய ஆட்டுமந்தைகள், மாட்டுமந்தைகளை பலுகிப் பெருகுகிறது என்று பொறாமைகொள்ள ஆரம்பித்தனர். பொறாமை கொண்டால் அடுத்து என்ன செய்வார்கள் அதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று நினைப்பார்கள். ஆகையால் அவனுடைய தண்ணீர் துரவுகளை மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள். சாப்பிடுகிற சாப்பாட்டில் மண்ணை அள்ளிப்போட்டது போல பெலிஸ்த மக்கள் செய்தார்கள். அந்த இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? பதிலுக்கு பதில் செய்து இருப்பீர்கள். அப்படிசெய்யாவிட்டால் உங்களுக்கு தூக்கம் வராது. அப்படியே நீங்கள் தூங்கினாலும் உங்கள் வீட்டில் உள்ள உங்கள் மனைவி உங்களை தூங்கவிடாமல், இந்த மனுஷனுக்கு தூக்கம் ஒரு கேடா? தண்ணீர் துரவுகளை மண்ணைக்கொண்டு நிரப்பிப்போட்டவனை சும்மா விடலாமா? அவனுக்கு நாம என்ன துரோகம் பண்ணினோம்? ஏன் இப்படி செய்தார்கள் என்று சரமாரியா சொல்லி சண்டையிட செய்திடுவார்கள். ஆனால் ஈசாக்கோ, அவனுடைய மனைவி மற்றும் குடும்பத்தினரோ ஒன்றும் செய்யவில்லை.

பின்பு அந்த எதிர்ப்பை எப்படி சமாளித்தான் என நீங்கள் கேட்கலாம். "ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்தான்" (ஆதி.26:17). பொல்லாதவர்களை விட்டு விலகினான். இவ்வளவு ஆசீர்வாதம் நிறைந்த இடத்தை எப்படி விட்டுக்கொடுக்க முடியும் என்று நாம் சொல்லுவோம். ஆனால் இப்படிச் செய்த அந்த பொல்லாத பெலிஸ்த மக்களை விட்டு பிரிந்து வேறொரு இடத்தில் குடியிருந்துகொண்டு ஆபிரகாம் வெட்டின துரவை கண்டு அதை சரிசெய்து தன்னுடைய வேலையைத் துவக்கினான். நாமாக இருந்திருந்தால் சலித்துப்போய் ஒன்று அந்த வேலையை விட்டு இருப்போம் இல்லையென்றால் தேவனை நோக்கி முறையிட்டிருப்போம். அவனோ; "தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான்" (ஆதி.26:18). இங்கே நாம் கூர்ந்து கவனிக்கவேண்டிய ஒரு பகுதியிருக்கிறது; என்னவென்றால், பெலிஸ்தர் தூர்த்துப்போட்ட துரவுகளை மறுபடியும் தோண்டிய ஈசாக்கு அந்த துரவுகளுக்கு தன் தகப்பன் என்ன பேர் வைத்திருந்தானோ அதே பெயரையே மீண்டும் வைக்கிறான். இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம். தன் தகப்பன் ஜெபத்தோடு செய்த ஒரு சிறு காரியத்தைக்கூட மாற்றாமல் அதை பின்தொடர்ந்திருக்கிறான் என்பது நமக்கு தெரியவருகிறது. இன்றைக்கு துணிந்து வேதாகமத்தையே மாற்றிப்போதிக்கிற ஜனங்கள் பெருகி இருக்கிறார்கள். ஈசாக்கின்

சம்பவம் நமக்கு ஒரு முன்மாதிரியை கொண்டுவருகிறது. முற்பிதாக்கள் செய்த காரியங்களை நாம் மாற்றாமல் அவைகளை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. சில மியூசியத்தில் வேதாகமத்தின் சுவடுகள் காக்கப்பட்டு வருகின்றன. அப்படி காக்கப்படுவதினால், அவிசுவாசிகள் நம்புவதற்கு அவைகள் அவசியமாக இருக்கிறது. நமக்கும் அவைகளை நினைத்துப்பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகையால் ஜெபத்தோடு மூதாதையர் செய்த காரியங்களை மாற்றாமல் அவைகளுக்கு இருக்கக்கூடிய பெயராலே அவைகளை நாமும் அழைக்க முற்படுவோம்.

ஈசாக்கு இப்படியாக இடம்பெயர்ந்து வேறே துரவுகளை வெட்டி குடியிருந்தும் அவனை பெலிஸ்தர்கள் விடவில்லை. அங்கும் வந்து வாக்குவாதம் பண்ணினார்கள். இந்த துரவு தங்களுடையது என்றார்கள். அவனோ; "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு" என்று கர்த்தர் மத்.5:40-ல் சொல்லியபடி அவன் தான் தோண்டின துரவுகளை பெலிஸ்த மக்களுக்கு விட்டுவிட்டு சென்றான். பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்து போய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்; நாம் தேசத்தில் பலுகும்படிக்கும், இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி; அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான். மேலும், "அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப்போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள். அவன் செல்லும் இடங்களில் தேவனை தொழுதுகொண்டான் என்று படிக்கிறோம். நாம் கர்த்தரை தொழுது கொள்ள நினைக்கும்போது அவர் நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார். அவர் என்னை முதலாவது ஆசீர்வதிக்கட்டும் பின்பு நாம் அவருக்கு அள்ளிக்கொடுப்பேன் என்று அநேகர் சொல்வதைக் கேள்விப்படுகிறோம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும் அப்பொழுது இவைகளெல்லாம் கூட கொடுக்கப்படும் என்ற வசனத்தை அவர்கள் நினைத்துப்பார்ப்பதில்லை. ஈசாக்கு செல்லக்கூடிய இடத்தில் முதலாவது அவன் செய்த காரியம் ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தரை தொழுதுகொண்டான். தேவனை அறியாதவர்கள் வீடு கட்டினால் முதலாவது சாமி ரூம் என்று ஒரு அறையை ஒதுக்குகிறார்கள். இந்த நம்பிக்கைகூட தேவனை அறிந்தவர்களுக்கு வருவதில்லை. நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கக் கற்றுக்கொள்ளுவோம். அவர் நமக்கு எண்ணிலடங்கா ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் சங்கீதக்காரன் சொல்வதைப்போல சொல்லுவோம்; "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்" என்போம் (சங்.116:13,14). உங்களுடைய பிரயாசத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**கர்த்தர் நம்மோடிருக்கும்போது எதிராளிகளின் நிலைமை என்னவாகும்?**

அப்படிப்பட்டவர்களை தேவன் அழித்துப்போடாமல் அவர்களுக்கு முன்பாக தேவன் நம்மை உயர்த்துவார். ஈசாக்கின் வாழ்க்கையில் அது நடந்தது. "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள்



செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ.3:23,24) என்று எழுதினார். இந்த தபீத்தாள் ஒரு சீஷியாக இருந்தாளென நாம் வாசித்தோம். எனவே பவுல் கூறியதைப்போல கிறிஸ்துவுக்கு சீஷியாக இருந்ததினிமித்தம் சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோமென்று அறிந்து கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்திருக்கிறாள். ஆம், அன்பான சகோதரிகளே, இவள் ஜீவியம் நமக்கு சிறந்த எடுத்துக்காட்டல்லவா? இயேசுவுக்கு சீஷியாகமாறின நீங்களும் நானும் இந்த சிந்தனையுள்ளவர்களாயிருக்கிறோமா? வரப்போகிற சுதந்தரமாகிய பலனை எண்ணி நன்மைசெய்கிறோமா? இவ்விதமான கேள்வி கேட்டாலே சிலர் சலித்துக்கொள்ளுகின்றனர். எங்கே எனக்கே ஒன்றுமில்லாதிருக்கையில் நான் எப்படி மற்றவர்களுக்கு உதவுவது என்பர். இவள் தன்னிடமிருந்த சிறிய ஊசியைக் கொண்டு தானே இந்த நற்கிரியைச் செய்தாள். அப்படியானால், நாம் நம்மிடமுள்ள சிறிய தாலந்துகளைப் பயன்படுத்தி கர்த்தரை பிரியப்படுத்தக் கூடாதா? அன்பு சகோதரியே, உங்களை நீங்களே வருத்திக்கொள்ளாதீர்கள். தேவன் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகளைக் கொடுத்துள்ளார். ஏதோ பெரிய டாக்டராகவோ, எஞ்சினியராகவோ அல்லது பெரிய அந்தஸ்தோடே பணபலமிக்கவராகவோ இருந்தால் தான் மற்றவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்று சொல்லி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தைப் புதைத்துப்போட்டு விடாதீர். இருக்கிற சிறிய தாலந்தை எவ்வாறு கர்த்தருக்கென்று பயன்படுத்தலாம் என்று சிந்தித்துப்பாருங்கள். சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை தன்னிடமிருந்த கொஞ்சமாவையும் எண்ணெயையும் கர்த்தருக்கென்று பயன்படுத்தினாள். அதனால் பஞ்சகாலமெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டாள். கர்த்தருக்கென்று ஒரு காரியத்தைச் செய்யும் போது மிகுந்த பலனைப் பெறுவோம்.

**2. தொற்காள் ஒரு பணிவிடைக்காரி:**

இவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் என வசனம் 36-ல் வாசிக்கிறோம். நற்கிரியைகளையும், தருமங்களையும் சாதாரணமாகச் செய்யவில்லை மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள் என வாசிக்கிறோம். இங்கே கவனியுங்கள்: அவள் வசூல் செய்து தானதர்மம் பண்ணினாளா? இல்லை. தன் சொந்தக் கைகளினால் வேலை செய்து, அதிலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து மிகுதியாய் செய்தாள். உங்களுடைய தானதர்மம் எப்படிப்பட்டது? பவுல், "... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி.15:56) என்று எழுதுகிறார். கர்த்தருக்குப் பணிவிடைசெய்கிற சகோதரியே, கர்த்தருக்குச் செய்கின்ற கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாக, எச்சூழ்நிலையிலும் சோர்ந்து போகாது செய்கிறீர்களா? இல்லை, நமக்கொரு வெற்றி, நமக்கொரு பெரிய ஆசீர்வாதம், நமக்கொரு உத்தியோகம் கிடைத்தால் மட்டும் கர்த்தரை நினைத்து அவருடைய கிரியைகளில் ஈடுபடுகிறோமா? எல்லாமே எனக்குக் கிடைக்கவேண்டும், மகளுக்குத் திருமணமாக வேண்டும், மகனுக்கு வேலை கிடைக்க வேண்டும், நோய் குணமாகவேண்டும், இவையெல்லாம் இருந்தால் தான் கர்த்தருக்கடுத்த செயல்களில் ஈடுபடுவேன் என்கிறீர்களா? இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மட்டும் கர்த்தரை பின்பற்றுவீர்களானால் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவீர்கள். இந்த தபீத்தாளுக்கோ எந்த உறவுமிருந்ததாக வேதம் கூறவில்லை. இவளுக்கு ஆதரவாகவும், உதவியாகவும் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் நற்கிரியை செய்வதிலும், தருமங்கள் செய்வதிலும் எப்பொழுதும் பெருகுகிறவளாயிருந்திருக்கிறாள். "...நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும்,



## ஒரு சிறிய ஊசியினால்...

With a Small Needle... *-J.Glory Arjunan*

'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது தமிழ் பழமொழி. உண்மைதான்! தங்களிலிருந்த சிறிய காரியங்களைக் கொண்டு பெரிய காரியங்கள் நடைபெற காரணமாயிருந்த அநேக சகோதரிகளை நம்முடைய வேதாகமம் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அநேகர் தங்களிடமிருந்த கொஞ்சப் பொருளை தேவ சித்தம் நிறைவேற பயன்படுத்தி பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். அப்போஸ்தலர்9:36- ஒரு அருமையான சகோதரியை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த ஸ்திரீ தன்னுடைய சிறிய ஊசியினால் பெரிய காரியத்தை தேவநாம மகிமைக்காக செய்தவள். இவள் பெயர் தொற்காள். யோப்பா பட்டணத்தில் வாழ்ந்து வந்த ஒரு சீஷி. இயேசுவுக்கு சீஷிகள் அநேகர் இருந்தனர். தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து வந்த யோவன்னாள், சூசன்னாள் போன்றவர்களைப் பற்றி நாம் அறிவோம். இவர்களைப் போல இந்த தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் சீஷியாக இருந்துகொண்டு இயேசுவின் குணாதிசயங்களை வெளிப்படுத்திவந்தாள்.

தபீத்தாள் என்றால் 'Gazelle' என்று பொருள். இந்த 'Gazelle' என்ற ஆங்கில வார்த்தைக்கு அகராதி 'வேகமாக ஓடக்கூடிய ஒருவகை அராபிய மான்' என விளக்கமளிக்கிறது. நம்மில் அநேகர் மானினுடைய சாந்தமுள்ள கண்கள், மெல்லிய ஒல்லியான கால்கள், அதனுடைய வசீகரமான மற்றும் வேகமான ஓட்டம் போன்றவற்றையெல்லாம் ரசிக்கின்றோம். இந்த அர்த்தமுடைய பெயரை தரித்திருந்த இந்த தபீத்தாள் மான்களுக்குரிய இந்த குணாதிசயங்களில் ஏதேனும் ஒன்றினைப் பெற்றிருந்தாளா? அவளைக் குறித்து வேதம் '...அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்துகொண்டு வந்தாள்' எனக் கூறுகிறது (வச.36). இவள் விதவைகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்துகொண்டு வந்திருக்கிறாள். அப்படியானால் இவளுக்கு குடும்பமிருந்ததா? இவள் திருமணமானவளா? இவளுக்குப் பிள்ளைகளிருந்தார்களா? இவள் வயது சென்றவளா? இதைப்பற்றியெல்லாம் வேதம் நமக்குத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவள் இயற்கையான மரணம் எய்யவில்லை. இவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள் என வேதம் கூறுகிறது (வச.37). எனவே அவள் தன் இளம்வயதில் மரித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவள் மரணமடைந்தபின் அவளுடைய மகிமை வெளிப்படுகிறதை பின்னுள்ள வசனங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். "...விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து..." (வச.39) என வாசிக்கிறோம். இவளுடைய வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

**1. தொற்காள் தன்னுடைய தாலந்தை தேவனுக்காகப் பயன்படுத்தினாள்:**

தன்னுடைய சிறிய ஊசியினால் அங்கிகளையும், வஸ்திரங்களையும் பின்னி விதவைகளுக்கும் எளியவர்களுக்கும் அவைகளைக் கொடுத்து உதவிசெய்திருக்கிறாள். தன்னைச் சுற்றியிருந்த ஜனங்களுக்கு உதவிசெய்திருக்கிறாள். பவுல் கொலோசெயருக்கு, "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று



நிர்ணயம் பண்ணினோம். நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம். நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள்" (ஆதி.26:28,29). சத்துருக்களும் உம்மோடே சமாதான உடன்படிக்கை பண்ணுவார்கள் என்று சொல்லப்பட்டபடி ஈசாக்கை எதிர்த்தவர்கள் கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவனோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்படியாக வந்தார்கள். அன்பானவர்களே கர்த்தரை நம்பி காரியத்தைச் செய்யுங்கள். ஈசாக்கைப்போல நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**நடப்புச் செய்திகள்**

- **இந்தியா முழுவதும் தென்மேற்கு பருவமழை இயல்பான அளவு பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.**
- **கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதி மரணம் அடைந்த தாய்லாந்து நாட்டின் மன்னரின் உடல் வரும் அக்டோபர் 26-ம் தேதி பாங்காக் நகரில் தகனம் செய்யப்படும் என அந்நாடு அறிவித்துள்ளது.**
- **அமெரிக்கா 'எச் 1 பி' விசா வழங்குவதில் கிடுக்கிப்பிடி**


**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**


**தெரிந்து கொள்வோம்**

**துணுக்குகள்** K.R.K.Ravi Asir, Associate Editor



"கோலா கரடி"

**பூனை மாதிரி உடம்பும், எலிக்குட்டி போன்ற முக அமைப்பும் கொண்ட பிராணி, கோலா. இது கரடி இனத்தை சேர்ந்தது. சாதுவான பிராணியான கோலா, வாழ்நாள் முழுவதும் யூகலிப்டஸ் மரத்தில் தான் இருக்கும். இது இரவு முழுவதும் இலையைத் தின்று பகலில் தூங்கும். "கோலா" தான் சாப்பிடும் இலையில் இருந்தே தனக்குத் தேவையான தண்ணீரை எடுத்துக்கொள்ளும். கடும் வெயிலில் கூட இது தண்ணீர் குடிக்காது பெண் கோலா வருடத்துக்கு ஒரு குட்டிதான் போடும் கங்காரு போல கோலா கரடியும் ஆறு மாதத்துக்கு குட்டியை தன் வயிற்றில் வைத்திருக்கும்.**


தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**



# நாம் ஏன் ஆராதிப்பதற்குக் கூடுகிறோ?ம்

## Why We Meet For Worship?

J.C.Choate



நாம் கிறிஸ்தவராயிருப்ப தினாலும், கிறிஸ்துவின் சபை கூட்டத்தாராயிருப்பதினாலும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல்நாள் தோறும் கூடுகிறோம். நாம் இவ்வாறு செய்வதற்கு பல காரணங்கள் உண்டு.

இக்காரணங்களை ஆராய்வதற்கு, ஒரே தேவனும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவும் உண்டு என்று நாம் அறியவேண்டியது அவசியம். அவர் நமது சிருஷ்டிகரும் நாம் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் அருளிச் செய்கிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினிமித்தம், அவருடைய குமாரனாகிய இயேசுவை உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி அனுப்பி, நாம் இரட்சிக்கப்படும் பொருட்டு தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் நமக்காக இதை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றபடியினால், அவருக்காக ஜீவிக்கவும், அவரை சேவிக்கவும், அவர் வழிநடத்துகிறபடி அவரை ஆராதிக்கவும் விரும்புகிறோம். கிறிஸ்து, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்" (யோவா.4:24). நாம் சேவிக்கிற தேவன் ஒரு மனிதனல்ல, ஒரு மிருகமல்ல, அல்லது ஒரு உயிரற்ற பொருளல்ல. அவர் சூரியனுக்கோ, சந்திரனுக்கோ அல்லது நட்சத்திரங்களுக்கோ, ஒரு நதிக்கோ, ஒரு மலைக்கோ அல்லது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு விக்கிரகத்திற்கோ ஒப்பானவரல்ல. அவர் ஆவியாயிருக்கிறார், சகலத்தையும் உண்டாக்கியவர், வாழ்வில் ஆதரிக்கிறவரும், அழிவில்லாமலிருக்கச் செய்கிறவருமாயிருக்கிறார். மதிகேடன் மட்டுமே அவர் இல்லையென்று சொல்லுவான் (சங்.14:10).

நாம் பங்குகொள்ளுகிற தொழுகையில் பரலோகத்தின் தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்படுகின்ற ஆராதனை, துதி மற்றும் கனம் போன்றவைகள் சம்பந்தப்பட்டுள்ளன. நம்முடைய தொழுகை ஆவியினால் செய்யப்படுகிறது. அதாவது, நாம் இதை எல்லா உண்மையோடும், தாழ்மையோடும், நாம் செய்கின்ற தொழுகையில் முழு கவனம் கொண்டிருப்பவர்களாகவும் செய்கிறோம்.

நாம் உண்மையோடும் நம்முடைய தொழுகையைச் செய்கிறோம். அதன் பொருள், சத்தியத்தின்படி அல்லது தேவன் தம்முடைய வார்த்தையில் கூறியிருக்கிறபடி நாம் தேவனைத் தொழுது கொள்கிறோம் என்பதாகும். நாம் தொழுதுகொள்ளுகிற தேவன் ஒருவரே மேலும் நாம் நம்மைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறோம்.

அதன் பொருள், நாம் மனுஷருடைய கோட்பாடுகளின்படியும் கட்டளைகளின்படியும் தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாய் இல்லை (மத்.15:9). நீங்கள் அறியாமல் அவரைத் தொழுதுகொண்டால், அவர் பிரியப்படுத்தப்பட்டாலும் அல்லது நாம் எப்படித் தொழுதுகொள்ளுகிறோம் என்பது ஒரு பெரியகாரியமில்லையென நாம்



கிறிஸ்தவத்தை குழப்பிக் கொள்ளாதீர்கள். நாமகரண கூட்டத்தார் கிறிஸ்துவின் சபையாக இருக்கிறதில்லை. அவைகள் மனுஷரால் தொடங்கப்பட்ட இயக்கங்களாய் இருக்கின்றன. மனுஷரை பின்பற்றுகிறவர்களை தாம் இரட்சிக்கவிருப்பதாக கிறிஸ்துவானவர் தம்முடைய வார்த்தையில் எங்கேயும் வாக்குத்தத்தமாக உரைக்கவில்லை. தம்மைப்பின்பற்றுகிறவர்களையே இரட்சிப்பதாக அவர் உரைத்திருக்கிறார்.

**சில நாமகரண சபைகளின் தொடக்கம்**

| பெயர் | ஸ்தாபகர் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|
| ரோமன் கத்தோலிக்கசபை | போனிபஸ்3 | ரோம் நகரம் | 606 |
| லூத்தரன் சபை | மார்ட்டின் லூத்தர் | ஆகஸ்பர்க், ஜெர்மனி | 1520 |
| பிரெஸ்பிட்டேரியன் சபை | ஜான் கால்வின் | சுவிட்சர்லாந்து | 1535 |
| ஆங்கிலிக்கன் சபை | ஹென்றிராஜா 4 | இங்கிலாந்து | 1536 |
| பாப்டிஸ்டு சபை | ஜான் ஸ்மித் | ஹாலந்து | 1607 |
| மெதடிஸ்ட் சபை | ஜான் வெஸ்லி | லண்டன், இங்கிலாந்து | 1729 |
| இவாஞ்செலிக்கல் சபை | ஜேக்கப் ஆல்பிரைட் | பென்சில்வேனியா அமெரிக்கா | 1803 |
| மோர்மன் சபை | ஜோசப் ஸ்மித் ஜுனியர் | நியூயார்க் அமெரிக்கா | 1830 |
| ஏழாம் நாள் சபை | வில்லியம் மில்லர் | மாஸக்யூஸெட்ஸ் அமெரிக்கா | 1830 |
| யெகோவா சாட்சிகள் | சார்லஸ்ரஸ்ஸல் | பென்சில்வேனியா அமெரிக்கா | 1872 |
| பரிசுத்த பெந்தேகோஸ்தே சபை | குழு | சவுத் கரோலினா அமெரிக்கா | 1898 |
| அசெம்ப்ளி ஆப் காட் | குழு | ஆர்கன்சாஸ் அமெரிக்கா | 1914 |
| கிறிஸ்தவ சபை | குழு | கன் சாஸ்நகரம் அமெரிக்கா | 1906 |
| சமுதாய சபைகள்------- | | | |

ஒரு போலியான சபையினால் வஞ்சிக்கப்படாதிருங்கள். வேதாகமத்தின் உண்மையான சபைக்கு கீழான எந்த ஒன்றோடும் சமரசம் செய்து கொள்ளாதிருங்கள். கர்த்தருடைய ஜனங்களின் பிராந்திய சபை ஒன்று உங்களுக்கு அருகாமையில் இல்லையென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராகும்படியாக அவசியம் செய்ய வேண்டியது பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டீர்களோ அதை செய்யுங்கள். அப்பொழுது தேவன் தாமே உங்களை சபையிலே சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன் பின் உங்களுடைய பொறுப்பு என்னவென்றால், உங்களை சுற்றிலும் இருக்கிறவர்களுக்கு நீங்கள் போதனை செய்யுங்கள். நீங்களும் மற்றவர்களும் கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறபடியால் அவருடைய சபையானது உங்கள் பகுதியில் வளர்ந்து பெருகும். நீங்கள் ஒன்று சேர்ந்து ஆராதிக்கவும், ஐக்கியம் கொள்ளவும் முடியும், மேலும் நீங்கள் சுவிசேஷத்தை உங்களுடைய குடும்பத்துக்கும், சிநேகிதருக்கும் கொண்டு செல்லத் தக்கதாக ஊழியம் செய்ய முடியும்.

ஒரு முறை கிறிஸ்துவின் சபையானது தொடங்கப்பட்டுவிட்டால் அது ஒருபோதும் அழிக்கப்பட்டுப்போவதில்லை என்று கிறிஸ்துவானவர் மத்.16:18-20 வசனங்களில் வாக்குத்தத்தம் செய்தார். பிழையானது சபைக்குள்ளே படிப்படியாக வளரத் தொடங்கிய பொழுது சபைக்கு என்ன சம்பவித்தது? இன்றைக்கு தவறான சத்தியம் போதிக்கப்படும் பொழுது என்ன சம்பவிக்கிறது? சிலர் கள்ள போதனையினாலே விழுந்து போவார்கள், சிலர் சத்தியத்திற்காக எழுந்து நிற்பார்கள். இதே காரியம் பல நூற்றாண்டுகளாக நடந்திருக்கிறது: பலர் - அநேகர் - படிப்படியாக சத்தியத்தை விட்டு விலகினார்கள், ஆனால் இந்த 2000 வருஷ சரித்திரம் முழுவதிலும் எப்பொழுதுமே உண்மையுள்ள கிறிஸ்தவர்களும், உண்மையுள்ள பிராந்திய சபைகளும் உலகத்திலே இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் பிரிவினைகள், குழுக்களாக செயல்படுதல் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் தாங்கள் என்று உரிமை கொண்டாடுகிறவர்களின் சின்னத்தனங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்கு அவமானத்தை கொண்டு வந்திருக்கின்றன, இப்படி உரிமை கொண்டாடுகிற மற்ற மார்க்கங்கள் தேவன் முன்னுரைத்தபடியே அவருடைய மார்க்கத்தின் பெருமைக்கு முன்பாக குருடாக்கப்பட்டிருக்கின்றன ஐரோப்பாவில் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கங்களினால் மார்க்க பேதமுள்ளவர்களாக எண்ணப்பட்டு உபத்திரவப்படுத்தி கொலை செய்யப்பட்டவர்களுக்கான ரோமன் கத்தோலிக்கர்களுடைய புலனாய்வுகளினால் "கிறிஸ்தவம்" தூஷிக்கப்படுகிறது. ஆனால் இது கிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தை தூஷிக்கக்கூடிய ஒரு குற்றமாக இருக்கிறது. மெய்யான கிறிஸ்தவர்கள் இந்த அக்கிரமங்களில் பங்கு கொள்ளாதவர்களாய் இருக்கிறார்கள்.

இப்பொழுதும் நாம் மனுஷருடைய தவறுகளுக்கு அப்பால் உற்று நோக்குவோம், கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவத்தின் கேடுபாடான அமைப்புகள் தேவனுக்கு ஏற்புடையவைகள் அல்ல, நாம் நமக்காக தேவன் விரும்புகிற ஐக்கியத்தை பரிசுத்தத்தை காண்போமாக.

பெண்கள் பகுதி

## தேவனுடைய திட்டம் வெளிப்பட்டது

### God`s Plan Revealed

*-Betty*

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி




விசுவாச வீழ்ச்சி குறித்த சுருக்கமான ஒருவரலாறு

சபை தொடங்கப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குள் அதை வழிநடத்திய மனுஷர்கள், வழி விலகிச் செல்லும்படி வழி நடத்தினார்கள். வேதவாக்கியங்களுக்கு எதிரான அந்த உபதேசங்கள் போதிக்கப்பட்டு ஜனங்கள் சத்தியத்தை விட்டு விலகும்படியாக வழிநடத்தப்படுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கை செய்தார்'' ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொ ய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதே சங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்'' (1தீமோ.4:1-3).

கி.பி 606-ம் ஆண்டில் இந்த விசுவாச வீழ்ச்சியின் விளைவாக ''பரிசுத்த கத்தோலிக்க சபை'' என்று அழைக்கப்பட்ட சபைக்கு மேலாக முதலாவது ''போப்'' என்று அழைக்கப்பட்டவர் வந்தார் கத்தோலிக்க சபையே உண்மையான சபை என்று அது உரிமை கொண்டாடுகிறது காலக்கணக்கின்படி பேதுருவே முதல் போப் என்று வாதம் செய்கிறார்கள். ஆனால் இந்த வாதங்கள் பொய்யாக இருக்கின்றன. வேதவாக்கியங்களில் எங்கேயும் கிறிஸ்துவை தவிர சபைக்குத்தலையாக இருக்கிறதாக நாம் வாசிக்கிறதில்லை (கொலோ.1:18). கத்தோலிக்க உபதேசத்தையும், அதன் முறைமைகளையும், புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருப்பவைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்போமாகில் இந்த ஸ்தாபனமானது, மெய்யான சபையாய் இருப்பதை விட்டு தூரமாயிருக்கின்றன என்பது விரைவாக வெளியரங்கமாகும். இரண்டு முக்கியமான கத்தோலிக்க உபதேசங்கள் ஆவன.

1. ஆசாரியர்கள் விவாகம் செய்வதை தடைசெய்தல்.

2. சில குறிப்பிட்ட இறைச்சிகளை சில குறிப்பிட்ட நாட்களில் புசிப்பதை தடை செய்தல் ஆகிய இவைகள் பவுல் கொடுத்த எச்சரிக்கைக்கான நேரடி நிறை வேற்றம் ஆக இருக்கிறது.

மெய்யாகவே கத்தோலிக்க சபை மிகவும் கேடுபாடு நிறைந்ததாகியது. 1500-ம் ஆண்டில் ஒரு ஆவிக்குரிய கலகம் ஏற்பட்டது. இந்த கத்தோலிக்க சபையில் ஒரு ஆசாரியராயிருந்த மார்ட்டின் லூத்தர் ரோமன் கத்தோலிக்க சபையின் போதனைகளையும், அதிகாரத்தையும் முதலாவதாக வெளிப்படையாக எதிர்த்தவர் ஆவார். தொடர்ந்து வந்த வருஷங்களில் மற்றவர்களும் இதை பின்பற்றினார்கள். ''மறுமலர்ச்சி இயக்கம் என்று அறியப்பட்ட ஒன்று நடந்தது. அநேக மனுஷர்கள் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கங்களை விட்டு விலகி புதிய சபைகளை அல்லது நாமகரண கூட்டங்களை தொடங்கினார்கள். இவைகளில் சில அவற்றின் ஸ்தாபகர்களின் பெயரை தங்களுடைய மார்க்கங்களுக்கு சூட்டிக் கொண்டார்கள் (லூத்தர்); சிலர் தங்களுடைய குறிப்பிட்ட உபதேசங்களின் பெயர்களை (பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள்,பெந்தேகொஸ்தேக்கள்) மட்டுமல்ல இன்னும் சிலர் தங்களுடைய இயக்கத்திற்காகவும் தங்களை அவ்விதமாக அழைத்துக் கொண்டார்கள் (பிரெஸ்பிட்டேரியன்).

இந்த வருஷங்களின் காலத்திலிருந்து ஆயிரம் ஆயிரமான துண்டு குழுக்கள் தொடங்கப்பட்டன இவைகள் தங்களுக்கென்று தலைமை ஸ்தாபனங்களையும், இயக்கங்களையும், தலைவர்களையும் ஏற்படுத்திக் கொண்டன. மிக சமீபமான காலங்களில் மையத்திலிருந்து ஸ்தாபிக்கப்பட்ட குழுக்களை புறக்கணித்து விட்டு தங்களுக்கென்று ''சமுதாய சபைகளை'' உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் அத்தியாவசியமாக எந்த ஒரு பெரிய இயக்கத்துடனோ அல்லது குறிப்பிட்ட உபதேசங்களுடனோ அடையாளப்படுத்தப்படுகிறது இல்லை. இவர்களில் அநேகர் இரட்சிப்புக்கான வழியாக ''விசுவாசம் ஒன்றே போதுமானது'' என்று போதிக்கிறார்கள், வேத வாக்கியங்களிலுள்ள அதிகமான உபதேச சத்தியங்களை அசட்டை செய்கிற ஒரு சமூக சுவிசேஷத்தை உடையவர்களாக இவர்கள் இருக்கிறார்கள் எந்த விதமான அடிப்படை உபதேசமும் இன்றி, எந்த நாமகரண கூட்டத்தில் இருந்து வந்த எவர் ஒருவரும் இவர்களுடைய ஐக்கியத்திலிருப்பதை மிகவும் சவுகரியமானதாக உணரக்கூடும்.

உலகத்திலே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கிறிஸ்தவத்துடன், புதிய ஏற்பாட்டு



காலமெல்லாம் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கிறோம் என நாம் காரணம் காட்டினாலும் அதனால் ஒன்றுமில்லை. இது நாம் தொழுதுகொள்ளுகிற விதத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது இல்லாவிட்டால் தேவன் இந்தக் காரியத்தில் அவர் பேசியிருக்கமாட்டர்.

வேதாகமம் போதிக்கின்றபடி வாரத்தின் முதல்நாள் தோறும் கிறிஸ்தவர்களாகிய நாம் கூடி ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.இதற்கான திருஷ்டாந்தத்தை அப்போஸ்தலர்20:7-ல் நாம் பெற்றிருக்கிறோம். நாம், ‘‘வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்’’ என வாசிக்கிறோம். பழைய ஏற்பாடு சட்டத்தின் கீழ், ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாயிருந்தது, ஆனால் கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து தம்முடைய சொந்தக்கட்டளையினால் அதை மாற்றிப் போட்டார் (கொலோ.2:14). அந்த பழைய கட்டளையை எடுத்துப்போட்டதின் மூலம் ஆராதனைக்குரிய நாளாயிருந்த ஏழாம் நாளும் எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து கல்லறையிலிருந்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார் என வாசிக்கிறோம் (28:1-6). அதைப்போல சுவிசேஷமும் வாரத்தின் முதல்நாளிலே முதல்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டு, அதே நாளில் சபையானது தன்னுடைய ஆரம்பத்தைப் பெற்றது (அப்.2). முடிவாக, பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் தங்களுடைய வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கும்படிக்கு அவர்களுக்கு எழுதினார். ஆனால் சிலர், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவரும்படி எந்த ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை எனச் சொல்லலாம். ஒவ்வொரு வாரத்திலும் வாரத்தின் முதல்நாள் உண்டு, வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாளாயிருக்குமானால், ஆராதனைக்குரிய நாளாயிருக்குமானால் பிறகு கிறிஸ்தவர்கள் இதன் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

எபிரெய ஆசிரியர் நாம் சபைகூடிவருதலை விட்டுவிடக்கூடாதென்கிறார். அவர் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகிறபடி, ‘‘அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்’’ (எபி.10:23-27). நாம் ஒருவருக்கொருவர் கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டுமென அவன் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். அவர் எதைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்? நல்லது, நாம் விட்டு விடாதபடிக்கு ஒழுங்கின் அடிப்படையில் நாம் கொண்டுள்ள சபை எது? அவன் சிலர் அதை விட்டு விலகிக்கொண்டிருந்தார்களென சொன்னான், ஆனால் அவர்கள் செய்தது போல நாம் செய்யக்கூடாது. மாறாக, நாம் ஒருவரை ஒருவர் கவனித்து, அல்லது ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, நாளானது சமீபித்து வருகிறதைப் பார்த்து சபை

கூடிவரவேண்டுமெனச் சொல்கிறார். ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்த போதிலும்கூட தொடர்ந்து மனதார நாம் பாவஞ்செய்வோமானால் நாம் தொடர்ந்து நம்முடைய பாவத்தில் நிலைத்திருக்கையில் கர்த்தர் நம்மைக் காப்பாற்றமுடியாதென்று சொல்ல அவர் துரிதப்படுகிறார். ஆனபடியினால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறது என்பது மட்டுமல்ல ஆனால் சபைக்கூடிவருவதில் இணைந்திருக்கிறதான அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவது என்பதும் முக்கியமானதாகும்.

இப்பொழுது தேவனுக்கு ஆராதனை ஏறெடுக்கையில் வாரத்தின் முதல் நாள்தோறும் நாம் என்னசெய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்? வேதவாக்கியத்தில் பல காரியங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்20:7-ல் குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படிக்கு அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்படிக்குக் கூடினார்கள். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல், ''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் காத்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து; இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்'' (1கொரி.11:23-29). கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி அப்பம் பிட்கப்பட வேண்டியிருந்தது, கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படி பானம் பண்ணப்படவேண்டியிருந்தது என பவுல் சொன்னதை தயவுசெய்து கவனியுங்கள். வேறுவார்த்தைகளில் கூறுவோமென்றால், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கிரயமாக செலுத்தப்பட்டதை தம்முடைய ஜனங்கள் தொடர்ந்து நினைவுகூரும்படி விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது கிறிஸ்தவர்கள் மீண்டும் சிலுவையை நோக்கிப் பார்க்கிறார்கள். இதைச் செய்யும்போது அவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே கர்த்தருடைய பந்திமிகவும் முக்கியமானதாகும். இது ஆவிக்குரியவகையில் கர்த்தருக்கு முன்பாக தான் எந்நிலையில் இருக்கிறோமென தன்னுடைய சொந்த வாழ்க்கையை சீர் தூக்கிப்பார்பதற்கான ஒரு தருணமாயிருக்கிறது. இவ்வாறே இது கிறிஸ்துவைக் குறித்த சில மதிப்புமிக்க பாடங்களை உலகத்திற்கு உபதேசிக்கும் வாய்ப்போடேகூட கிறிஸ்தவர்களை வரவேற்கிறது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதிக்கும்படிக்கு கூடிவரவேண்டியவர்களாயிருக்கின்றனர். மேலும் அவ்வாறு அவர்கள் செய்கையில் சேமித்துவைக்க அல்லது தன்தன் வரவுக்குத் தக்கதை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அவருக்குக் கொடுக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். பவுல், ''பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து, நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப்



ஏன்? அற்புதங்களைக் கண்டதினால் நிக்கொதேமு ஒரு எடுத்துக்காட்டான பரிசேயனிலிருந்து வேறுபட்டவன். ஏனென்றால் அவன் இயேசுவானவர் செய்த அற்புதங்களைப் பார்த்து அவர் தேவனுடைய குமாரனென்று மனப்பூர்வமாய் நம்பினான் (3:2) கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அறிந்து கொள்ளும்படி அவரிடம் இன்னும் சற்று நெருங்கிப்போனான்.

இப்போது பெலவீனமான விசுவாசம் ஆனால் அவன் விசுவாசமும் தைரியமும் அவனில் வளர்ந்தன (யோவா.7:6-8).

இங்கே "நாம்" என்று குறிப்பிடுவது மற்றவர் இந்த விசுவாசத்தில் பங்கெடுக்க வழிவகுத்தான் (3:2) என்பதைக் குறிப்பிடுகிறது. இயேசுவானவரை அவன் ரபீ என்றழைக்கிறான். இது போதகருக்கு கொடுக்கப்படும் மரியாதையைக் குறிக்கும் பட்டம்.

4. இயேசுவானவர் உடனே அவனுக்கு புதிய பிறப்பைப் பற்றிப் போதிக்கிறார்.

5. பலர் புதிய பிறப்பு இல்லாமலேயே இரட்சிப்படைய முடியும் என்று நினைக்கின்றனர். ஆனால் நாம் புதிய பிறப்பில்லாமல் தேவனுடைய இராஜ்யத்தைக் காணவோ அதில் பிரவேசிக்கவோ முடியாது (3:3-5).

6. இது நிக்கொதேமுவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கவேண்டும். ஒரு யூதனாக முன்னரே தன்னை தேவனுடைய இராஜ்யத்தின் ஒரு பாகமாக நினைத்துக்கொண்டிருந்தான். அவனுடைய மாம்ச சரீரம் அதனோடு இரட்சிப்பின் வாக்குத்தத்தையும் உடையதாகயிருக்கிறது என்று போதிக்கப்பட்டிருந்தான். ஆனால் இப்போது அவன் மறுபடியும் பிறக்க வேண்டும்.

7. நிக்கொதேமு குழப்பமடைந்தான். இன்று அநேகர் புதிய பிறப்பைப்பற்றி குழம்பியிருப்பது போல நிக்கொதேமு குழப்பமாயிருந்தான்.

எது புதிய பிறப்பில்லை.

அது மாம்சத்தில் பிறப்பதல்ல

ஆரம்பத்தில் நிக்கொதேமு அதை ஒரு சரீர பிறப்பாகவே எண்ணினான். இன்றும் பலர் தண்ணீர் சரீர பிறப்புக்கு அடையாளமாக இருக்கிறது என்று நம்புகின்றனர். ஆனால் அதை ஏன் குறிப்பிடுகிறார்கள் வெளிப்படையாகவே எல்லோரும் சரீரத்தில் பிறக்கிறார்கள்.

அது ஒரு ஆவிக்குரிய அனுபவமில்லை அல்லது தூய ஆவியானவரின் நேரடி செயல்பாடுமில்லை.

1. தேவனுடைய வார்த்தைக்கு அப்பாற்பட்டு ஒரு அனுபவத்தை சிலர் சொல்லுகின்றனர்.
2. எல்லா மனிதரும் ஏன் இரட்சிக்கப்படவில்லை.
3. இந்த விதமான முறையில் யாரும் இரட்சிக்கப்பட்டதாக தேவவசனத்தில் ஆதாரமில்லை. இது பிரசங்க பீடத்திலிருந்து கொடுக்கப்படும் அழைப்புக்குப் பின் உணர்ச்சி வசப்பட்டு பற்றிக்கொண்டவனைப்போல நடந்து கொள்வதில்லை.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அந்த மனிதனும் ஒரு பாவியை பிரசங்க பீடத்திண்டை பாவமன்னிப்புக்காக வரச் சொன்னதுமில்லை. பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ளச் சொன்னதுமில்லை.

உடனடி மனமாற்றம் அல்லது மதத்தைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது கிருபையின் அனுபவம் போன்ற எதையும் பற்றி சொல்லப்படவில்லை.

இது ஒரு பாவியின் ஜெபத்தை ஜெபிப்பது கிடையாது.

1. பாவியின் ஜெபம் என்று வேதத்தில் எந்த எடுத்துக்காட்டும் கிடையாது.
2. சீடர்கள் இயேசுவானவரிடம் ஜெபிக்க கற்றுக் கொடுக்கச் சொன்னபோது அவர் பாவியின் ஜெபத்தைக் குறிப்பிடவில்லை.

பாடம் - 22

# Pig - Tail Religion

## பன்றி - வால் மதம்

*- Jerry Bates*

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




நம்மிலே எத்தனைபேர் மக்கெதோனியர்கள் அல்லது இந்த விதவையைப்போல கொஞ்சமாவது இருக்கிறோமா?

1. சபை காணிக்கையில் 80 சதவீதத்தை 20 சதவீதம் அங்கத்தினர்களே கொடுக்கிறார்கள் என்று ஒரு கணக்கீடு சொல்லுகிறது.

2. இருப்பினும் 80 சதவீதம்பேரை 20 சதவீதத்தைதோடு ஒப்பிடும்போது சிறிய வித்தியாசமேயிருக்கிறது.

3. வித்தியாசம் வருமானத்தில் இல்லை. வித்தியாசம் அதில் உண்டென்றால் நம்மில் அநேகர் பன்றியைத் தின்றுவிட்டு அதன் வாலை தேவ னுக்குக் கொடுக்கிறவர்களாயிருக்கிறோம்.

4. நீங்கள் எவ்வளவு காணிக்கை கொடுக்கிறீர்களென்று எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை. ஆனால் தேவனுக்குத் தெரியும் அவர் நம்மை விசாரிக்கிறார் என்பதை நாம் அறியவேண்டும்.

**நிறைவாக:**

1. நீங்கள் பன்றிவால் மதத்தைப் பின்பற்றுகிறீர்களா?

2. நான் எண்ணுகிறேன் இந்தப் புறமதத்தார் தங்கள் தெய்வத்துக்கு ஏன் வாலைக் கொடுக்கிறார்கள் என்றால் வால் அவர்களுக்கு உபயோகமானதல்ல.

3. நான் உறுதியாக நினைக்கிறேன். சில கிறிஸ்தவர்களும் இவ்விதமாகவே சிந்திக்கின்றனர். அவர்கள் தங்களுடைய நேரம் பணம் ஆகியவற்றில் பன்றிவால் பகுதியையே கொடுக்கிறார்கள், ஏனென்றால் அவைகள் அவர்களுக்கு பயனற்றதாகத் தோன்றுகிறது.

பாடம் -24

## புதிய பிறப்பு- (யோவான் 3:1-5) The New Birth

1. சில மனிதர்கள் ஒருமுறை பிறந்து இரண்டு முறை மரிக்கிறார்கள் மற்றவர்கள் இரண்டு முறை பிறந்து ஒருமுறை மரிக்கிறார்கள்.

2. இந்த புதிரின் பொருள் நிக்கொதேமுவிடம் இயேசு சம்பாஷித்ததில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது (யோவா.3:1-9).

3. நிக்கொதேமுவின் குணாதிசயங்கள் நல்லதும் கெட்டதும் கலந்த ஒன்று, பரிசேயரில் பலர் மாய் மாலக்காரர்களும் கர்வமுள்ளவர்களுமாயிருந்தனர். ஆனால் மற்றவர்கள் மிகவும் பக்தியுள்ளவர்களாகயிருந்தனர்.

ஆட்சியாளர் அநேகமாக சனகரிப் சங்கத்தில் ஒரு அங்கத்தினராக இருக்கலாம் (தலைமைத்துவ ஸ்தானம்).

அதிகாரி அல்லது இஸ்ரவேலிலே ஒரு போதகன் (யோவா.3:10). அது அவன் ஒரு பரிசேயன் என்பதை இது குறிப்பிடுகிறது.

அவன் ஐசுவரியவானாக இருக்கவேண்டும். இயேசுவானவரின் அடக்கத்துக்கு 100 பவுண்டு வாசனைப் பொருட்களைக் கொண்டுவந்தான். அவனுக்கு உலகப்பிரகாரமாக நிறைய பணிகள் நடந்து கொண்டிருந்தன. முதலாவது அவன் இரவில் (இயேசுவிடம்) வந்ததில் ஏதேனும் ஆச்சரிய முண்டா? அவன் ஊர் ஊராகப்போய்க்கொண்டிருக்கிற பள்ளிக்குச் செல்லாத கலிலேயன். அமைதியாகவும் அதிகம் தனிமையாகவும் இருந்தபடியால் அவன் அவரிடம் வர பயந்தபடியாலும் இரவில் வந்துள்ளான்.



பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி.16:1,2) என்றான். 2கொரிந்தியர்9:6,7-ல் பவுல், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க்கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என எழுதினார். நிச்சயமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று இயேசு சொல்லியிருந்தார் (அப்.20:35). பழைய கட்டளையின்கீழ் கர்த்தருடைய ஜனங்கள் தசமபாகம் அல்லது தங்களுடைய வருமானத்தில் 10-ல் ஒரு பகுதியினை கொடுக்க கட்டளையிடப்பட்டிருந்தனர், ஆனால் அந்த கட்டளை தொடர்ந்து நிலைநிற்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் பெற்றிருக்கிற செழுமைக்கேற்ப கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அது எவ்வளவு? சந்தேகமேயில்லை, அது பத்தில் ஒரு பகுதியை விட அதிகம். நிச்சயமாகவே நாம் கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்துவந்தவர்களைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறோம்.

நாம் தேவனை துதிப்பாடல்களினால் பாடி கீர்த்தனம்பண்ணும்படிக்கு வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றார். கொலோசெயர்3:16,17-ல் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன்பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என பிரகடனப்படுத்தினான். இந்த வசனங்களிலும் மற்ற பகுதிகளிலும் நீங்கள் காண்கையில், தேவனைத் துதித்து பாடுவதை முக்கியப்படுத்துகிறது. எபிரெய ஆசிரியர் நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை கர்த்தருக்கு ஏறெடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபி.13:15) என்கிறார். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் ஆராதனையில் வாத்தியக் கருவி இசையை பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஆராதனையில் வாத்தியக்கருவி இசையினைப் பயன்படுத்துவதால் என்ன தவறு? இது குறித்த நன்மை என்ன? வெறுமனே பாடுவது மூலம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் முடியுமென நீங்கள் அறிவீர்கள். ஆனபடியினால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கிறபடி நாம் பாடக்கடவோம். இதற்குமேல் செல்லும்போது அது கர்த்தருடைய வெறுப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும்.

கடைசியாக, கிறிஸ்தவர்களாகிய நாம் வாரத்தின் முதல்நாள்தோறும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் நம்முடன் பேச அனுமதிக்கும்படி ஆராதிக்கிறவர்களாயிருக்கிறோம், மேலும் அத்தோடுகூட நாமும் நம்முடைய ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசுகிறவர்களாயிருக்கிறோம். நாம் 2தீமோத்தேயு2:15-ஐ வாசிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறோம். கிறிஸ்து நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார் (யோவா.5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள்

“அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” (அப்.2:42). நாம் வேத ஆராய்ச்சியில்லாமலும் ஜெபமில்லாமலும் நாம் எவ்வாறு அநேகமாக ஆராதிக்க முடியும்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? நீங்கள் முறைப்படி ஆராதிக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் கிறிஸ்தவரல்லவென்றால், நீங்கள் தேவனோடு ஒரு சரியான உறவில் இல்லை ஆகவே நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் அவரை ஆராதிக்க வேண்டும். நீங்கள் கிறிஸ்தவராக மாறும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கிறிஸ்து, “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” (மாற்.16:16) என்றார். நீங்கள் அதைச் செய்தால், கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன்பின் நீங்கள் தொழுது கொள்ளமுடியும்.

## சாலொமோனை ராஜாவை அறிவீர்களா!

- *மூவாயிரம் நீதிமொழிகள் எழுதினான் – 1இரா.4:32*
- *பாட்டுகள் ஆயிரத்து ஐந்து – 1இரா.4:32*
- *நாள் ஒன்றிற்குச் செல்லும் சாப்பாடு... – 1இரா.4:22,23*
- *நாலாயிரம் இரதக் குதிரைலாயங்களும், – 1இரா.4:26*
- *ஆயிரம் மனைவிகள் – 1இரா.11:3*
- *தேவாலயம் கட்ட ஏழுவருஷம் – 1இரா.6:38*
- *அரமனை கட்ட 13வருஷம் – 1இரா.7:1*
- *2000 குடம் தண்ணீர் பிடிக்கும் தொட்டி – 1இரா.7:23–26*
- *இஸ்ரவேலை 40 வருஷம் ஆண்டான் – 1இரா.11:42*
- *முன்னும் பின்னும் சரியானவன் இல்லை – 1இரா.3:12*

**ஜெபியுங்கள்**

- இம்மாதம் நடைபெறவுள்ள 20 வது வாசகர் கருத்தரங்கிற்காக..
- மாவட்டங்கள்தோறும் கர்த்தருடைய சபை எழும்ப...
- இம்மாதம் நடைபெறவுள்ள தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களின் கூட்டத்திற்காக...
- ஒப்புக்கொடுக்கப்பட்ட ஊழியர்கள் எழும்ப...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்” யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**



**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**

*Contact: 94435 58041*



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends

*-TVOTI*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**பாடம் -2**

வேதம் என்ன சொல்லுகிறது?

தேவனுக்கும் நம்முடைய நண்பர்களுக்குமிடையே ஒரு பிரச்சனை உள்ளதாக வேதம் போதிக்கிறது. அநியாயம், அத்துமீறல், சட்ட விரோதம், துன்மார்க்கம், குற்றவுணர்வு, அநீதி போன்றவைகள் இப்பிரச்சனைக்கு காரண்ங்களாகக் கருதப்படுகிறது.

வேதாகமம் பயன்படுத்துகிற வார்த்தைகளில் இவைகளும் சில, ஆனால் அதிகமாக பயன்படுத்தப்படுகிற வார்த்தை ‘பாவம்’ எனக்குறிப்பிடுகிறது.

பாவம் ஒரு பிரச்சனையாகும், ஏனென்றால் இது தேவனோடுள்ள ஆரோக்கியமான உறவிலிருந்து நம்மைப் பிரிக்கிறது. ஏசாயா "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என எழுதுகிறார் (ஏசா.59:1-2). இப்பாடம் பாவத்தைக்குறித்து விவாதிக்கும்.

பாவம் தேவனை வேதனைப்படுத்தி மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கிறது. தேவன் முதல் மனுஷன், மனுஷியாகிய ஆதாம், ஏவாளை படைத்தார் என ஆதியாகமம் புத்தகம் நமக்குச் சொல்லுகிறது. ஆதியாகமம் 1:27 "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார் அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" என்று கூறுகிறது. இது அவர்களை உண்டாக்கின தேவனின் சிருஷ்டிப்பு "மிகவும் நல்லது" ஆக இருந்தது என்று மேலும் கூறுகிறது. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று" (ஆதி.1:31).

தேவன் ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கியபோது அவர்களிடம் அவர்களுடைய வாழ்க்கையில் பாவம் இல்லை. தேவன் அவர்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார்.

**“உங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்” –லூக்.10:20.**